பெறுநர்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு
சென்னை.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,**

வணக்கம்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 5000க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்களும், 2000க்கும் மேற்பட்ட ஆசிரியரல்லாத அலுவலர் பணியிடங்களும் காலியாக உள்ளதால் ஏழை, எளிய மாணவர்களின் கல்வி நலன் பாதிப்பிற்குள்ளாகிறது. கல்லூரிகளில் 1.1.2006க்குப்பின் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கான பணி மேம்பாடு வழங்கப்படவில்லை. சில உதவி பெறும் கல்லூரி நிர்வாகங்கள் சுயநிதிப்பிரிவுகளை மேம்படுத்தும் நோக்கில் உதவிபெறும் வகுப்புகளை மூடுகின்றன. உதவி பெறும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களை நிர்வாகங்கள் பழிவாங்கும் போக்கு அதிகரித்து வருகிறது. பல்கலைக்கழகங்களில் ஊழல் மலிந்து, நிதி, நிர்வாகச் சீர்கேடுகள் அதிகரித்து வருகிறது. சுயநிதிக் கல்லூரி மற்றும் பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஊதியம் மற்றும் பணிநிலை சீர்படுத்தப்படாமலே உள்ளதால் சுயநிதி ஆசிரியர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். சுயநிதி கலை, அறிவியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்படாததால் கட்டாய நன்கொடை அதிகரித்து வருகிறது. ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி உச்சநீதிமன்றத்தில் அரசு கல்லூரி என தீர்ப்பளிக்கப்பட்டு அரசின் உரிய ஆணைக்காக காத்திருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறும் வயது மற்றும் வீட்டு வாடகைப்படி உள்ளிட்ட படிகள் அரசிற்கு இணையாக இல்லாத நிலை உள்ளது. குறிப்பாக 1.4.2003க்குப் பின் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2011 தேர்தலின் போது அறிவித்தபடி புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட்டு வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டத்தை அமல்படுத்தும் ஆணையினை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

எனவே மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள் மேற்கண்டவற்றை கனிவுடன் பரிசீலித்து உரிய ஆணைகளை வழங்கி உயர்கல்வி நலன் காக்க வேண்டுகிறோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள,

நகல் : 1. மாண்புமிகு தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள்
2. முதன்மைச் செயலாளர், உயர்கல்வித்துறை, தமிழ்நாடு அரசு.

JAC JAC JAC

தமிழக அரசே

- கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் அலுவலர் பணியிடங்களை நிரப்புதல்.
- 01.01.2006க்குப் பின் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களின் பணி மேம்பாடு வழங்குதல்.
- சுயநிதி/ஒப்பந்த/கௌரவ ஆசிரியர்களுக்கு UGC ஊதியம் வழங்குதல்.
- ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மீதான பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கைவிடுதல்.
- பல்கலைக்கழகங்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிடுக.

AUT TNGCTA MUTA TANTSAC

JAC JAC JAC

தமிழக அரசே

- கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் அலுவலர் பணியிடங்களை நிரப்புதல்.
- 01.01.2006க்குப் பின் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களின் பணி மேம்பாடு வழங்குதல்.
- சுயநிதி/ஒப்பந்த/கௌரவ ஆசிரியர்களுக்கு UGC ஊதியம் வழங்குதல்.
- ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மீதான பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கைவிடுதல்.
- பல்கலைக்கழகங்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிடுக.

AUT TNGCTA MUTA TANTSAC